# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2371/33 - 2024 පෙබරවාරි මස 15 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.02.15

*2371/33 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்*

*2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

கொழும்பு 01,
2024, பெப்புருவரி 14.

**ஒழுங்குவிதிகள்**

*2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட, 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 06 ஆந் திகதிய 2235/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்பட்டவாறான 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 03 ஆந் திகதியிடப்பட்ட 2213/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (இலங்கைக்கு வெளியில் வதிகின்ற ஆளொருவர் மூலம் இலங்கையில் மேற்கொள்ளப்படும் மூலதனக் கொடுக்கல் வாங்கல்களின் வகுப்புகள்) ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்பட்டிருந்தது :*

i. *ஒழுங்குவிதிகளின் அட்டவணையின்* I *ஆம் பகுதியின் அ தலைப்பின் கீழ் 1 ஆம் பந்தியின் துணைப் பந்தியாக (12) பின்வருவன உட்சேர்க்கப்படுகின்றது.*

(12) *"அட்டவணையின் இப்பகுதியின் அ தலைப்பின் கீழ், 7 ஆம் மற்றும் 8 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நீக்கல்கள் மற்றும் வரையறைகளுக்குட்பட்டு, 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் கீழ் உரிமம் வழங்கப்பட்ட தீர்ப்பனவு நிறுவனமொன்றினால் பிரகடனப்படுத்தப்பட்ட விதிகளின்*


1A - PG 6669 — 406 (2024/02)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*நியதிகளுக்கமைவாக "பிணையங்கள் கடன்பெறுதல் மற்றும் கடன் வழங்குதல்" இன் கீழ் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட ஏதேனும் பிணையங்களை கையகப்படுத்துவதற்கு, வைத்திருப்பதற்கு, கையுதிர்ப்பதற்கு அல்லது பிணையுறுதியாக வாக்களிப்பதற்கு".*

ii. *ஒழுங்குவிதிகளின் அட்டவணையின் I ஆம் பகுதியின் அ தலைப்பின் கீழ் 4 ஆம் பந்தியின் (1) ஆம் துணைப் பந்தியின் (ஊ) விடயமாக பின்வருவன உட்சேர்க்கப்படுகின்றது.*

(ஊ) *"அட்டவணையின் பகுதி I இன் அ தலைப்பின் கீழ், 1 ஆம் பந்தியின் துணைப்பந்தி (12) இன் கீழ் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் ஒன்றிற்காக அல்லது கொடுக்கல் வாங்கலிலிருந்து வதியாத முதலீட்டாளர் ஒருவர் மூலமான கட்டணங்களின், தயாரிக்கப்பட்ட கொடுப்பனவுகளின், இலாபங்களின், விற்பனை வரவுகளின் அல்லது ஈடளிப்பின் அல்லது வேறு வகையிலான வழியில் எதுவாயினும்சரி, மேற்கொள்ளப்பட்ட அனைத்து கொடுப்பனவுகள் மற்றும் கிடைக்கப்பெற்ற அல்லது பெறுவிக்கப்பட்ட வருமானம் அத்துடன் மூலதன பெறுகைகள் என்பன வதியாத முதலீட்டாளர் மூலம் ஏதேனும் பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அல்லது இலங்கை ரூபாவில் திறந்து பேணப்படுகின்ற உள்முக முதலீட்டுக் கணக்கிற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்".*

EOG *02-0119*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.